**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

## STC.NO. 14/2021, STC.No. 19/2021, STC.No. 20/2021, STC.No. 52/2021 and STC.No. 53/2021 PW-2

| | |
|---|---|
| Name | சௌருபராஜ் |
| Husband/Father Name | நடராஜன் |
| Village /Area | |
| Taluk | |
| Occupation | துணை மேலாளர், HDFC Bank, ராணிப்பேட்டை |
| Age | 28 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 10.09.2024 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**(எதிரி ஆஜரில் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**(மேற்சொன்ன வழக்குகளில் முதல் விசாரணையானது பொதுவாக எடுக்கப்படுகிறது.)**

**முதல் விசாரணை**

வழக்கின் 6வது எதிரி குளோபல் எண்டர்பிரைசஸ் எங்கள் வங்கியில் கணக்கு வைத்துள்ளார். குளோபல் எண்டர்பிரைசஸ் நிறுவனம் எங்கள் வங்கி கிளையில் 2015ம் ஆண்டு வங்கி கணக்கை தொடங்கியுள்ளது. மேற்சொன்ன நிறுவனத்தின் கணக்கு 2015 தொடங்கிய காலத்தில் இருந்து 15.06.2023 வரை இயக்கப்பட்டுள்ளது. காசோலை எண்.000476 ஆனது 30.06.2020 தேதியில் வழங்கப்பட்டுள்ளது. காசோலை எண்.000478 ஆனது 31.07.2020 தேதியில் வழங்கப்பட்டுள்ளது, காசோலை எண்.000479 ஆனது

31.08.2020 தேதியில் வழங்கப்பட்டுள்ளது, காசோலை எண்.000481 ஆனது 30.09.2020 தேதியில் வழங்கப்பட்டுள்ளது, காசோலை எண்.000482 ஆனது 31.10.2020 தேதியில் வழங்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன காசோலை எண்கள் வாசவி மார்க்கெட்டிங் நிறுவனத்துக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அந்த காசோலைகள் அனைத்தும் 6வது எதிரி குளோபல் எண்டர்பிரைசஸ் கணக்கில் போதிய பணம் இல்லாத காரணத்தால் திருப்பப்பட்டது. எங்களுடைய கணக்கு பட்டியலில் 6வது எதிரி குளோபல் எண்டர்பிரைசஸ் ஷாலிம் ஷூஸ் நிறுவனத்திற்கு இடையே 156 பரிவர்தனைகள் நடைபெற்றுள்ளது. 09.09.2015 முதல் பரிவர்தனையாகும், 05.02.2020 அன்று கடைசி பரிவர்தனை நடைபெற்றுள்ளது. எங்கள் வங்கியிலிருந்து தயார் செய்யப்பட்ட தற்போது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள 6ம் எதிரியின் கணக்கு பட்டியல் **அ.சா.ஆ.10** ஆக வழக்கில் குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

Sd/- **********
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.